**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 142/2025** |
| Prosecution witness | : | P.W. 6 |
| List of witness | : | L.W. 7 |
| Name | : | அர்ச்சனா |
| Father's /Husband Name | : | மெகபூப் பாட்சா |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 40 |
| Occupation | : | உதவி மருத்துவர்- வலங்கைமான் அரசு மருத்துவமனை, திருவாரூர் மாவட்டம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 06th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.06.2024 நன்னிலம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது மாலை 06.50 மணிக்கு பன்னீர் செல்வம் 51 வயது, த/பெ. அந்தோணிசாமி, ஆழியன் தோப்பு செம்பியன் கூந்தலூர், என்பவரை சிகிச்சைக்காக அவரது உறவினர் ஜெக்கப் ராஜா என்பவர் அழைத்து வந்தார். மேற்படி காயம்பட்ட நபரான பன்னீர் செல்வம் தன்னை தெரிந்த ஒரு நபர் வீட்டிற்கு அருகில் தன்னை அரிவாளால் தாக்கியதாக கூறினார். மேற்படி நபரை நான் பரிசோதனை செய்த போது, அவருக்கு இடது முன்பக்க தலையில் 10x6x4 செ.மீ வெட்டு காயம் இருந்தது. அவருக்கு சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு செய்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். **நான் அவருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு அ.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட நபர் கூறியது போல் சொன்ன விதத்தில் அரிவாளால் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபரான அ.சா.1 ஐ பரிசோதித்தபோது தன்னை எத்தனை நபர்கள் தாக்கினாராக கூறினாரா என்றால் தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக கூறினார் . மேற்படி நபர் ஆண் அல்லது பெண் என்று குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்ட காயமானது எந்தவொரு கூர்மையான ஆயுதத்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்ட காயமானது அ.சா.1 தடுமாறி முள் கம்பியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.06 14:23:54 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.